# மருதாணியின்றி சிவந்த மண்..!



மடவளை அன்சார் எம். ஷியாம்

# மருதாணியின்றிச் சிவந்த மண்...

மடவளை அன்சார் எம்.ஷியாம்

Great Wall Publishers,
27/4,Wanguwa Kade,
Madawala Bazaar.

# மருதாணியின்றிச் சிவந்த மண்...!


| | | |
|---|---|---|
| உரிமை | : | © ஆசிரியருக்கு |
| முதற்பதிப்பு | : | 2005 ஜுலை |
| அச்சகம் | : | ஷாஸன்ஸ் அச்சகம்<br>33, கண்டி வீதி,<br>மடவளை பஸார். |
| வெளியீடு | : | கிரேட் வோல் பதிப்பகம்<br>27/4, வங்குவக்கடை,<br>மடவளை பஸார். |
| விலை | : | 120/- |


# Marudhani Indri Sivanda Munn....


| | | |
|---|---|---|
| Copyright | : | Author |
| First Edition | : | 2005 July |
| Printed at | : | Shasons Printers,<br>33, Kandy Road,<br>Madawala Bazaar. |
| Publisher | : | Great Wall,<br>27/4, Wanguwa kade,<br>Madawala Bazaar. |
| Price | : | 120/- |









இரத்தத்தால் மூழ்கிய
உங்களுக்கு.......






# முன்னுரை

இது, கவிஞர் அன்சார் எம். ஷியாம் அவர்களுடைய இரண்டாவது கவிதை நூலாகும்.

இவரது முதலாவது கவிதைத் தொகுதியான 'என் தேசம்' வெளி வருவதற்கு முன்பே, நம் நாட்டின் வளரும் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்க வெகு சிலரின் நிரலில் இவரும் ஒருவர் என நான், இவரது சில கவிதைகள் மூலம் கணித்திருந்தேன்.அந்தக் கணிப்பை நாளுக்கு நாள் உறுதிப்படுத்தி வரும் ஷியாமின் இரண்டாவது தொகுதியான "மருதாணியின்றிச் சிவந்த மண்"ணுக்கு முன்னுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பழந்தமிழ் நூல்கள், மீள்பதிப்புப் பெறும்போது அல்லது சம காலத்து முதிர்ந்த எழுத்தாளர்களின் படைப்புக்கள் நூலுருப் பெறும்போது வழங்கப்படும் முன்னுரைக்கும் –

சமகாலத்து வளரும் படைப்பாளிகளின் நூல்களுக்கு வழங்கப்படும் முன்னுரைக்கும் பாரிய வேறுபாடுண்டு. முன்னது நயந்துரையாகவும் பின்னது தட்டிக்கொடுக்கும் உரையாகவும் அமையும்.

இங்கே, இளங்கவிஞர் ஷியாம் அவர்களின் படைப்புகளை நான் நயந்தும் உரைக்கிறேன் தட்டிக் கொடுத்தும் வாழ்த்துகிறேன்.

இந்நூலில் காணப்படும் கவிதைகளைப் பொதுவாக சமூக நிலைக் கவிதைகள் என்றே அழைக்கலாம். அரசியல், சமயம், காதல் மற்றும் பொது என துணைத் தலைப்புக்கள் இடுபவர்கள் இட்டும் கொள்ளலாம்.

இவரது எல்லாக் கவிதைகளிலுமே சமாதானம் இழையோடுகிறது. குரூரமான நிகழ்ச்சிகளைக் கருப்பொருளாகக் கொண்டு எழும் கவிதைகளிலும், பழிக்குப்பழியோ எதிர்ப்புக்குரலோ இருப்பதை விட, சமாதான அவாவே மேலோங்கி நிற்கிறது.

'பூவால் கூட ஒருத்தரை ஒருத்தர் அடித்தல்கூடாது!

நாவால் கூடப் 'போர்' எனும் வார்த்தை

பிறத்தல் ஆகாது!'

என்கிறார் நூலின் முதற்பாடலில்.

இவரது முதலாவது தொகுதியிலும் இதை வற்புறுத்துகிறார் : –

‘யுத்தம் துறந்திட ரத்தம் மறந்திட
ஒன்றாய் யோசிப்போம் – இங்கு
நித்தமும் ஒற்றுமை நிலைத்திட ஒருவரை
ஒருவர் நேசிப்போம்.’

என்ற வரிகள் முதல் நூலின் ‘மாலையாகட்டும் மலர்கள்’ என்ற கவிதையில் மின்னுகின்றன.

நாட்டுப்பற்று மிக்க இவரது அவா,

‘பறவைகளில்
சமாதானத்துக்குச் சின்னமாகப்
புறாவை ஆக்கிக் கொண்டது போல்,
தேசங்களில் –எனது தேசத்தையே
உலகம் எடுத்தியம்ப.....’

என்ற வரிகளை இவரது ‘என்தேசம்’ கவிதையில் நான் வெகுவாக நயக்கிறேன்.

‘ரத்தம் படாத
எனது பசுமை நிற மண் வேண்டும்’

என்று அதே கவிதையில், அன்று பாடிய கவிஞரின் கண் முன்னேயே, பின்னாளில் ரத்தம் கறைப்படுத்தியது என்றால் –

சற்றே உன்னித்துப் பாருங்கள்...

அதன் தாக்கமாக எழுந்த கவிதை, இந்த நூலில் இடம் பெறுகிறது, ‘மருதாணி இன்றிச் சிவந்த மண் ’ என்ற தலைப்பில்.

குரூர நிகழ்ச்சியொன்றைக் கருப்பொருளாகக் கொண்ட அந்தக் கவிதையின் முடிவில்,

‘சிரிப்பே, சிந்தனையே,
சிக்கலையெல்லாம் சீராக்கி
மக்களையெல்லாம் மகிழச் செய்!’

என்ற வரிகளால் தமது சமாதானத்தின் மீதான அவாவைக் கவிஞர் வலியுறுத்துகிறார்.

இவரது காதல் கவிதைகளைப் படிக்கிறபோது, காதலி எப்படி இருக்க வேண்டும் என்பதுவும், காதலனான இவர் காதலியை எவ்வாறு வைத்துக் கொள்வார் என்பதுவும் பூடகமான பிரமிப்பைத் தருகின்றன: –

‘மும்தாஜுக்கு வசிக்கக் கிடைக்காத
அந்தக் தாஜ்மகாலில்
ஷாஜஹான் வேண்டுமானால்
சாதனை படைக்கட்டும்!...
(சக்கரவர்த்தி)

‘நீ என்னைச் சேர்ந்தால் இறைவனைக் கேட்பேன்
நூறில் வாழ்க்கை ரெண்டு.’ –
(அறிவைக் குழப்பும் அழகி)

‘வீடென்றால் ஒரு கட்டில்
கட்டிலென்றால் ஒரு போர்வை
சூடாய் ஒரு ப்ளேன் டீ...’
(உடனடித் தேவை)

‘காதலின் விளைவு ஒன்றுதான் –
தோற்றாலும் வேதனை
வென்றாலும் வேதனை!’ (காதல் குரூரம்)

‘விஷத்தை மட்டுமே
நீட்டத் தெரிந்தவள் நீ
இருந்தாலும்
என் தாகங்கள் ஏன்
உன்னிடத்திலேயே கையேந்துகின்றன?...’
(நீ தான் யாரடீ?)

'உன் ஆசைகளையெல்லாம் அர்த்தப்படுத்த
எனக்கும் ஆசைதான்
இருந்தாலும் –
ஒன்றை நீ உணர்ந்து கொள்ள வேண்டும் : –
முன் போலல்ல –
இப்போதெல்லாம் இதுதான் வாழ்க்கை : –
'கடற்கரையில் ஓடவும் வேண்டும்
கைவிளக்கு அணையவும் கூடாது!?
(வீட்டுக்காரிக்கு)

இன்ஷா அல்லாஹ், கவிஞருக்கேற்ற காதலி கிடைப்பாளாக!

'மருதாணியின்றிச் சிவந்த மண்ணும் உதிர்ந்து போன நட்சத்திரங்களும்' என்ற கவிதையும் 'அன்புள்ள தம்பிக்கு' என்ற கவிதையும் ஒரே வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட இரு வேறு கவிதைகளாக மிளிர்கின்றன.

'சாவு', 'இல்லாமை', என்ற இரண்டு சிறு கவிதைகளும் ஒரே போக்கான இரு நிகழ்வுகளைக் கொண்டதாக அமைகின்றன.

'சுனாமி' யைக் கருவாகக் கொண்ட சிறு கவிதை இவரது கவித் துவத்திற்குச் சான்றாகிறது : –

'கடலே!
தூர இருந்தே
இரசித்துிட்டுப் போகிறேன்...
உன் புன்னகைகளை
எப்படி நம்புவது?!...'

'நீங்களும் நானும்' என்ற கவிதை, தான் நம்பியிருந்தவர்கள் செய்த மோசடியாக நிலவுகிறது : –

'பரதன் போல்
பரம பாசத்துடன் உங்களை
இராமனின் ஸ்தானத்தில் இருத்துகிறேன்.
நீங்களோ
கும்பகர்ணன் என்றுதான்
இன்னும் என்னைக் கூப்பிடுகிறீர்கள்!'

கவிஞரின் பல கவிதைகளில் ஓசை செழிப்பாக வருகிறது. எதுகை, மோனைகளுக்காக வேண்டி வலிந்து புகுத்தும் யாப்பை அவர் கைக்கொள்ளாமை மகிழ்ச்சி தருகிறது.

இவரது வரவுக் கவிதைகளில் கூடப் படிமம், குறியீடு என்பவற்றுக்காக அலையும் நிலைமை இல்லை.

வரவுக்கவிதை என்பது, கவிதைக்குரிய சீர்களும் உரைநடைக்குரிய வசனங்களும் கொண்ட ஓர் ஊடகமாகும். படிமம், குறியீடு என்பனவே அதில் கவித்துவத்தையும் பாடுபொருளின் வீச்சையும் கொடுப்பன. ஓரளவு படிமமும் குறியீடும் வரவுக் கவிதைக்குத் தேவை என்பதையும் கவிஞர் கவனத்திற் கொள்ள வேண்டும். இவரது கவிதைகளில் அவையிரண்டும் மிகக்குறைந்து காணப்படுவதால் தான், வசனங்களே மிகுதியாக இருப்பது போன்ற ஒரு குறைபாடு துருத்தி நிற்கிறது.

ஓர் ஆக்கம் சிறப்படையத் தேவையான அடிப்படைகளாக,

1 – உள் வாங்குதல்

2 – சுய அனுபவத்துடனான சிந்தனை

3 – வெளிக்கொணர்தல்

4 – வெளிப்பாட்டைச் செப்பனிடுதல்

எனும் நான்கு செயல்கள் அமைகின்றன. இவற்றுள் இறுதியானதைக் கவிஞர் இன்னும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று எதிர்ப் பார்க்கிறேன். உடன் தேவைகளுக்காக எழுதப்படும் கவிதைகள் அந்தக் கவனத்தைப் பெறுதல் தலையாயது. இறுக்கமும், சுருக்கமும் பெற வேண்டுமானால் ஆக்கத்தை ஆறப்போடுதலும் ஒரு வழி என்பது எனது அனுபவமும் கூட.

நாடு, சமூகம் தனது நிலைப்பாடு என்பவற்றை விளக்கியெழும் இவரது இந்தத் தொகுதி இவரது கவிதா வாழ்க்கையை இன்னும் உயரக் கொண்டு செல்ல வழி கோலும் என்ற நம்பிக்கையுடன், வருங் காலத்திய காத்திரமான ஒரு கவிஞனின் ஒரு வளர்ச்சிக்கு உரமூட்டுமாறு கவிதா ஆர்வலர்களை வேண்டி,என்றென்றும் ஆசிகளுடன் அமைகிறேன்.

அன்புடன்,
அல் அஸூமத்.

43/10 D,Sinha Road,
Kerangapokuna,
Mabola,Wattala.

# அணிந்துரை!

'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்'

"குப்பி விளக்கில்
எண்ணெய் இல்லாமல்
ஒவ்வொரு இரவும்
அப்படியே கிடக்கிறது......
வாசிக சாலையிலிருந்து
வாங்கிவந்த புத்தகம்
"எடிசனின் வரலாறு" "

என்கிற இவரின் சிறிய கவிதையை வாசித்த போது நான் என்னை அதனோடு பொருத்திப் பார்த்துக் கொண்டேன். குப்பி விளக்கை நமது நாடாகவும், எண்ணெய்யை சமூக ஒற்றுமையாகவும் மாற்றிப் பார்த்த போது, இனப்பிரச்சனை "எடிசனின் வரலாறு" என்கிற வாசிக்கப்படாத புத்தகமாக என் முன் விரிந்து கிடந்தது.

ஆயுத பலத்தாலோ, சிங்கள பேரினவாதத்தின் மீது கொண்ட அவநம்பிக்கையினாலோ அல்லது மண்மீது கொண்ட அதீத பாசம் காரணமாகவோ, தமிழர்கள் 90 வீதமாவது ஒன்றுபட்டு விட்டதால் "எடிசனின் வரலாற்றின்" கணிசமான பகுதியை அவர்கள் வாசித்து விட்டார்கள். ஆனால் நமது புத்தகம்தான் இன்னும் விரிக்கப்படாமலேயே கிடக்கிறது.

கவிதை என்பது ஓர் அற்புதமான கருவி. அதனை ஒரு திறப்பு என்று கூடச் சொல்லலாம். ஒவ்வொரு வாசகனிலும் அது வெவ்வேறு வித்தியாசமான அறைகளைத் திறந்து விடும். வாசிப்பவனின் மனோ நிலையையும், அவனது சமூக இருப்பையும் பொறுத்து ஒரு கவிதை பற்றிய தெளிவும் - அதன் தாக்கமும் வேறுபடுவதுண்டு. எதனையும் சொல்லாத, எதற்கும் பொருந்தாத, அர்த்தமற்ற வரிகளாக ஒருவனுக்குத்தோன்றுவது, ஏதோ ஒன்றை காட்டுகின்ற, எப்போதோ நடந்த ஒரு சம்பவத்தை இழுத்து வந்து மனக்கண்முன் நிறுத்துகின்ற மந்திரமாக மற்றொருவனுக்கு அர்த்தப்படுவதுண்டு.

இப்புத்தகத்தில் உள்ள தீக்குச்சிகளும், தீர்மானங்களும் என்கிற கவிதை இதற்கு நல்லதொரு உதாரணமாகும். என்னுடைய பார்வையில் அரசியல் கட்சிகளை சுட்டுவதாகவும், ஒரு மதவாதியின் பார்வையில் வெவ்வேறு இயக்கங்களை விமர்சிப்பதாகவும், ஒரு விரிவுரையாளனின் பார்வையில் பட்டப்படிப்பை முடித்து வெளியேறிய மாணவர்களை குறிப்பிடுவதாகவும் இக்கவிதை அர்த்தப்படலாம். யார் யார், எவ்வெவ் வழிகளில் அர்த்தப்படுத்திப் பார்த்தாலும் மனதில் பதியும்படியான யதார்த்தத்தை சித்தரிப்பதாக இக் கவிதை அமைந்திருக்கிறது.

நண்பர் மடவளை ஷியாமின் "மருதாணியின்றி சிவந்த மண்" என்கிற இப்புத்தகத்தின் ஒப்புநோக்குநர் பிரதியை வாசிக்கக் கிடைத்த போது நான் பல கவிதைகளில் தடுமாறி விழுந்தேன்.

"பூவால் கூட ஒருத்தரை ஒருத்தர்
அடித்தல் கூடாது!
நாவால் கூட போர் எனும் வார்த்தை
பிறத்தல் ஆகாது."

என்கிற வரிகளை போஸ்டர்களாக அச்சடித்து, இனவாதிகள் மறியல் போராட்டம் நடத்தும் இடங்களிலெல்லாம் சுவர்களை மூடி ஒட்டவேண்டும் என்று தோன்றுகிறது. மிகவும் எளிமையான வார்த்தைகளில், ஆழமான விடயத்தை அழகாக, அதுவும் ஓசை நயத்தோடு இவர் சொல்லியிருக்கின்ற விதம் என்னை மிகவும் கவர்ந்தது.

மடவளை எனது தனிப்பட்ட அரசியல் வாழ்க்கையில் மட்டுமல்ல இந்நாட்டு முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றிலேயே மிகவும் முக்கியமானதொரு மைல் கல்லாகும். சரியாகச் சொல்லப் போனால் "இலங்கையில் தேர்தல் வன்முறைகள்" என்று யாராவது புத்தகம் எழுதினால் அதன் முதல் அத்தியாயமாக மடவளைதான் வரும் என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

இரத்தத்தால் எழுதப்பட்ட அந்த கொடூர நிகழ்வின் வடு –

மகாவலி நதிக்கரையில் இருந்து
மகா'வலி' யோடு நான் வந்திருக்கிறேன்............

என்கிறவரிகள் இவரின் குரலில் ரூபவாஹினியில் பெருநாள் கவியரங்கமொன்றில் ஒளி – ஒலித்தபோது நான் மிகவும் அதிர்ந்து போனேன்.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் முக்கியமான தழும்பாக பதியப்பட்ட அந்த பத்து ஷூஹதாக்களும் ஒன்றில் இவரின் இரத்த உறவினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்கள். அநியாய, அக்கிரமங்கள் சாதாரண மனிதனை விட கவிஞனை மிகவும் ஆழமாக பாதிப்பதுண்டு. இவரின் பல கவிதைகளில் அந்த பாதிப்பு மிகவும் தெளிவாகத் தெரிகிறது.

"அல்லாஹ்வுக்குப் பிறகு

ஒரே நானாவையே ஒட்டியிருந்த

அரைடசன் தங்கச்சிகளுக்கும்

தலைதடவு............................"

என்று பெருநாள் பிறையை இவர் கூப்பிடுகின்ற போது ஆத்மா அப்படியே உறைந்து போகிறது. நான் அரசியலுக்கு வந்திருக்கவே கூடாது என்று மனது சஞ்சலப்படுகின்றது.


சரளமாக நாம் பாவிக்கிறவார்த்தைகளை மிகவும் லாவகமாகக் கையாண்டு இலகு தமிழில் அர்த்தமுள்ள கவிதைகளை தர மடவளை ஷியாமால் முடிந்திருக்கிறது. அகராதியை புரட்டவோ, வித்துவான் ஒருவரை தேடிப் போய் வியாக்கியானம் கேட்கவோ அவசியமில்லாத அளவுக்கு தழிழைக் கவிதையில் கையாளும் ஆற்றல் இவரிடம் அபரிமிதமாக காணப்படுகின்றது.

தேவைக்கு அதிகமாக படிமங்கள், குறியீடுகள் என்று தலையை குழப்புகிற பாண்டித்தியத்தை காட்டிக்கொள்ள இவர் அவசரப்படாமை இவர் எவ்வளவு அடக்கமானவர் என்பதை சொல்லாமல் சொல்கிறது.

“இழப்பு” என்கிற இவரின் கவிதை, இவரின் வயதென்னவென்று என்னை யோசிக்க வைத்து பிரமிப்புக்குள்ளாக்குகிறது. அரசியல் சதுரங்கத்தில் பல சகுனிகளிடம் மாட்டிக்கொண்டிருக்கும் என்னைக் கூட, நம்பிக்கை தளராமல் நிமிர்ந்து நிற்க வைக்கிற வலிமை, இவரின் கவிதைக்கு இருக்கிறதென்பதற்கு அந்தக் கவிதை நல்லதொரு உதாரணமாகும்.

எமது சமூகத்தின் எதிர்காலம் பற்றியும் நமது சந்ததிகளுக்கான வழிகாட்டல் பற்றியும் எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கும் எங்களைப் போன்றவர்களுக்கு, இவரைப் போன்ற இளைய தலைமுறையினர்கள் இருப்பது மிகவும் ஆறுதலைத் தருகின்றது.

**உங்கள்.**



ரவூப் ஹக்கீம் பா.உ,
தேசியத் தலைவர் – ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்,
263, காலி வீதி, கொழும்பு – 03.
06.07.2005

## என்னுரை!

'முதல் கவிதைத் தொகுதி வெளியிட்ட கையோடு, அடுத்த புத்தகமும் போட்டு விட வேண்டும்' என்று தான் எண்ணியிருந்தேன். ஆனால்,ஐந்து வருடங்கள் கடந்து விட்டன. அநேகமாக இது, பெரும்பாலான கலைஞர்க்கு நேரும் விபத்துத்தான்.

இது கொஞ்சம் பரவாயில்லை. எம்மை விட, தகுதியிலும், திறமையிலும், வயதிலும், மூத்த எத்தனையோ கலைஞர்கள், கவிஞர்கள் இன்னும் புத்தகம் போட்டுக்கொள்ள நேரம், காலம், பொருளாதார நிலவரங்கள் இன்றி தவித்துக்கொண்டிருக்கையில்! இங்கே – நமது கலைஞர்களைச் சரியான வகையில் தூக்கி விடுவதற்கான அமைப்புகளோ, இலக்கிய அபிவிருத்திச் சங்கங்களோ,தகுதிப்படைத்த தனிநபர் தட்டிக்கொடுப்புகளோ சொல்லிக் கொள்ளும் அளவு இல்லை. இலக்கியம் அல்லது நூல்களை வெளியிடுதல் என்பது, ஏதோ, 'இவனுக்குத் தேவை இல்லாத வேலையப்பா' என்று சொல்லிக்கொள்ளும் அளவுக்குச் சென்றிருக்கிறது.

என் மனதை எப்பொழுதுமே உறுத்திக்கொண்டிருக்கும் ஒரு விடயம், நம்மை விட இலக்கியத்தில் தரம் வாய்ந்த, தகுதி படைத்த பல மூத்த இலக்கிய வாதிகள் ஒரு புத்தகமேனும் கொண்டுவராமல் மறைந்து விடுவார்களோ என்ற அச்சம், பயம், ஆதங்கம், கவலை தான்.

நமக்குக் கைகொடுக்க, இங்கே சில நிறுவனங்களையாவது நாம் மிகவிரைவில் ஏற்படுத்தி ஆக வேண்டும். அதற்கு இந்தச் சமூகத்தில் தகுதி படைத்த புரவலர் பலர் உருவாக வேண்டும். முன்வர வேண்டும்.

இதில் முதலில் நம் கலைஞர்களைத் தான் நாம் குறை சொல்ல வேண்டியிருக்கிறது. முதலில், தான் தனது கலைப்படைப்புக்கள், புத்தக வடிவம் பெற வேண்டும் என்று பெரிய அளவில் சிந்திப்பதோ, அல்லது முயற்சிப்பதோ இல்லை.

இதே போல, அவர்களது பொடுபோக்குத்தனங்களும், 'இப்பொழுதே எதற்கு அவசரப்படுவானேன்' என்ற சிந்திப்புகளும் காலம் காலமாக அவர்களைக் கட்டிப்போட்டு வைத்து விடுகிறது.

தனது படைப்புக்கள் நூலுருப்பெறும் போது, ஓர் அங்கீகாரமும், அடையாளமும் கிடைக்கப் பெறுவதோடு, தனது படைப்புக்களைப் பாதுகாப்பதற்கு ஒரு உகந்த வழியாகவும், அமைந்து விடுகிறது. சமூகத்துக்குப் பயன்பட, ஓர் இலகுவழியாகவும் மாறி விடுகிறது.

இந்த நிலவரங்களின் அடிப்படையில், எனது இரண்டாவது கவிதைத் தொகுதி வெளிவருகிறது. அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் அல்ஹம்துலில்லாஹ்!

இந்தக் கவிதைத் தொகுதி வெளிவருவதில், மும்மரமாக நின்றவர் பலர். அவர்கள் அனைவரையும் நன்றிக் கனிவோடு பார்க்க எப்போதுமே நான் கடமைப்பட்டவன். அவர்கள் விபரங்கள் நன்றிக்குரியவர் பட்டிலில் இடம் பெறுகிறது. எவராவது விடுபட்டிருந்தால் அவர்களுக்கும் எனது நன்றி!

இதில் எழுதப்பட்டிருக்கும் அத்தனை கவிதைகளும் பல்வேறுபட்ட தாக்கங்களின் காரணமாக எழுந்தவை.இதில் நான் இருக்கிறேன். என் நாடு இருக்கிறது. என் புன்னகைகள் இருக்கின்றன. கண்ணீர் இருக்கிறது. கோபம் இருக்கிறது. கொதிப்பு இருக்கிறது. நம்பிக்கைகளும் இருக்கின்றன.

அத்தோடு இவற்றில் சில கவியரங்கக் கவிதைகளாகவும்,சாமான்ய வாசகனையும் கருத்தில் கொண்டு எழுதப்பட்டாலும், இறுக்கமான படிமங்களையும் குறியீடுகளையும் நான் தவிர்க்க முயன்றிருக்கிறேன்.

இதற்கு அணிந்துரை வழங்கிய கவிஞர். ரவூப் ஹக்கீம் அவர்களுக்கும்,முன்னுரை வழங்கிய கவிஞர் அல் அஸூமத் அவர்களுக்கும், பின் அட்டையில் எழுதிய கவிஞர் எஸ்.ஐ. நாகூர் கனிக்கும், மற்றும் எப்பொழுதும் என் இலக்கிய முயற்சிகளைத் தட்டிக் கொடுக்கும் அனைவருக்கும் என நன்றிகள்.

# சமாதானப் பாடல்!

யாரும் சேரும் காலம் வேணும் – அன்றே
போரும் தீரும் நாளும் தோணும்!
இந்நாடு நமதாகும்
நம்நாடு உயிராகும்!

பூவால் கூட ஒருத்தரை ஒருத்தர்
அடித்தல் கூடாது!
நாவால்கூட ‘போர்’ எனும் வார்த்தை
பிறத்தல் ஆகாது!
முகத்தைக் கழுவும் போது மட்டும்
விழிகள் நனையட்டும்!
சுகத்தைக் கேட்கத் தேவையில்லை – நமைப்
பார்த்தே தெரியட்டும்!

(யாரும் சேரும்)

மாவலி கங்கை ஒன்றே போதும்
கண்ணீர் தேவையில்லை!
யாவரும் அழுத கண்ணீர் சேர்ந்தால்
மாவலி நீளமில்லை!
பாவிக ளாகவே வாழ்ந்து முடிப்பதில்
பயனும் இருப்பதில்லை!
ராவினைக் கடந்து நடந்து வராமல்
விடியல் பிறப்பதில்லை!

(யாரும் சேரும்)

◆❑◆

● நன்றி; தினகரன்.

# ஆசிரியர்கள்!

ஆசிரியர்கள்
மாணவ நிலங்களில்
மாணிக்க விதை நடும்
மரியாதைக்குரியவர்கள்!

தவழும் பிள்ளையைத்
தூக்கி விடுபவர்கள்!
வாய்க்குள் விரல்விடும்
வயதில்...
பேனைபிடிக்கும் லாகவத்தைப்
பிஞ்சு விரல்களுக்குப்
போதிப்பவர்கள்!

நடக்கக் கற்பிக்கும்
நல்லவர்கள்!
பேசக் கற்பிக்கும்
பெரியவர்கள்!
விழுந்து கிடக்கும்
ஒவ்வொரு பொழுதும்
விரல்கள் பிடித்து
எழுப்புவிப்பவர்கள்!

அவர்தம் கரங்கள்
அதிசயமானவை
அவை –
தோற்கிறபோது
தட்டிக் கொடுப்பவை!
வெல்கிறபோது
கட்டித் தழுவுபவை!!

அவர், ஒரு கையில்
பிரம்பு இருக்கிறது.
மறு கையில்
ஆசி இருக்கிறது.

ஆசிகள் அளிப்பதில் அவர்
அதி முக்கியமானவர் என்பதால்தான்
அவரை நாம்
'ஆசிரியர்' என்றே
அழைக்கத் தொடங்கினோமோ!!

ஆசிரியரை நேசிப்பது
மாணவர் கடமை
மாணவரை போஷிப்பது
ஆசிரியர் கடமை.

மாணவர்கள்...
ஆசிரியர் சொத்து!
ஆசிரியர்களோ...
அனைவரதும் சொத்து!

ஆசிரியர் இல்லையென்றால்...,
பேறு நிறைந்த
பிள்ளைகளேது?!
அறிவு நிறைந்த
அகிலமேது?!
மனங்குளிரும்
மக்களேது?!

ஆசிரியர் இல்லையென்றால்...,
இருள் தவிர்ந்த
ஏதும் ஏது?!

என் ஆசிரியர்களே,
கல்லூரி வாழ்க்கை கடந்து
கன காலமாகி விட்டாலும் கூட,
உங்களைக் காணும்
ஒவ்வொரு பொழுதும்...
உங்களை எண்ணும்
ஒவ்வொரு பொழுதும் கூட
என் கால்கள்
தாமாகவே எழுந்து நிற்கின்றன.

கட்டளை பிறப்பிக்காமலேயே
கைகள்
கட்டிக் கொள்கின்றன!
மரியாதை தாள முடியாமல்
மனசு
கவிந்து கொள்கிறது!

ஏனெனில்,
செழுமைமிக்க உங்கள்
சேவைக்கு - இந்த
செகத்திலேது
வேறு நிகர்?!!

உண்மை இதுதான்
மாணவர் வெற்றி
பாடசாலையின் வெற்றி!
பாடசாலையின் வெற்றி
ஊரின் வெற்றி!!
ஊர்களின் வெற்றி
தேசத்தினதே வெற்றி!!!

ஆம், ஆசிரியர்களே
எல்லா வெற்றிகளினதும்
ஊற்றுக் கண்
உங்களிலிருந்தே
உருவாகிறது!

◆❑◆

● நன்றி; தினகரன் வாரமஞ்சரி.

# நாய்கள் பலவிதம்!

'குரைக்கும் நாய்
கடிக்காது' என்றதனால்,
காவலுக்காய் வாங்கி வந்தோம்
ஓர்
அமைதியான நாயை!
　　களவுகள் தொடரவே –
　　காலப்போக்கில்தான் புரிந்தது...
　　இந்த நாயோ..
　　ஊமை நாயென்று!

# இழப்பு!

நண்பனே...,
இழப்பு என்பது
இழப்பல்ல
'காப்பு' என்று
கருது!
நன்மைக்கென்று
நம்பு!

விளக்கு அணைந்ததால்
வெளிச்சம் தொலைந்ததாய்
விசனப்படும்
விட்டில் பார் –
அது உயிர்தப்பியது
அதற்குத் தெரியவில்லை!

உனதிழப்பில்
உள்ளநன்மை
நீ
உணரவில்லை!
இழப்பு என்பது
'காப்புத்' தான்!

இழந்தால்,
பெறுகிறோம் –
ஆவியாய் இழக்கிறோம்
மழையாய்ப் பெறுகிறோம்!
விதையை இழக்கிறோம்
மரத்தைப் பெறுகிறோம்!

கைகளை
முன்னால் வீசி மட்டுமே
யாரும்
நடப்பதில்லை!
பின்னால் ஒன்றும்
போக வேண்டும் –
அப்போதே முன்னேறலாம்!

ஒரு மூச்சை இழந்தே
மறுமூச்சைப் பெறுகிறோம்!
இழந்து பெறுவதே
இங்கு
வாழ்க்கையாகிறது!!

இழப்பு,
இன்னொன்றின்
துளிர்ப்புத்தான்,
பகலை இழந்தால்...,
நிலவைப் பெறலாம் –
இருளை மறந்து விடு!
இரவை இழந்தால்...
உதயம் தொடலாம்....
கவலை துறந்து விடு!!

துடிக்கும் தோழனே...
அமைதி கொள் –
'பெறத் தகுதிபெற்றவை
இழக்கவும் தகுதி பெற்றவை!'

மறக்காதே –
பெற்றதில் இழப்பது
இயற்கை!
இழப்பதில் பெறுவது
நம்பிக்கை!
இரண்டும் இணைந்ததே
வாழ்க்கை!!

நம்பு –
இழப்பு
இன்னொன்றின்
துளிர்ப்புத் தான்!

இருந்தும்...
இழப்புகளிலெல்லாம்
பேரிழப் பொன்றுண்டு –
அது...
நம்பிக்கை இழப்பதுதான்!
ஏனெனில்,
நம்பிக்கை இழப்பதென்பது..,
மிச்சமேயில்லாமல்
முற்றுமுழுதாய்
நம்மையே இழப்பதாகும்!!

அதை மட்டும்
இழந்து விடாதே!

◆❑◆

● நன்றி; தினகரன்.

# சக்கரவர்த்தி!

மன்னித்துக் கொள் –
அன்பே..,
என்னால்
தாஜ்மகால் கட்டித்
தர முடியாது!

இழந்த காதலியின்
இறவா நினைவாக
எழுப்பப்பட்டதல்லவா
அந்தத் தாஜ்மகால்!

மும்தாஜுக்கு
வசிக்கக்கிடைக்காத
அந்தத் தாஜ்மகாலில்,
ஷாஜஹான் வேண்டுமானால்
சாதனை படைக்கட்டும்!

உயிரே..!
என்னால் இயன்றது...
ஒரு குடிசைதான்!

நீ வா...
உனக்காகவே செய்யப்பட்ட
இந்தச் சின்னக் குடிசையில்
குதூகலமாய் என்னுடன்
குடியிரு – காலமெல்லாம்!

பிறகென்ன...
'ஷாஜஹானா?
நானா...?'
சக்கரவர்த்தி யாரென்று
காலம் சொல்லும்!

◆❑◆

● நன்றி; தினகரன் வாரமஞ்சரி.

# தீக்குச்சிகளும் தீர்மானங்களும்...

ஒவ்வொரு தீக்குச்சிக்கும்
ஒவ்வொரு வாய்ப்பு :

சில அடுப்பெரித்தன!
சில கூரைகளெரித்தன!
சில ஒளியூட்டின!
சில வழிகாட்டின!
சில இருள் துரத்தின!
சில பொருள் உணர்த்தின!
சில உயிர் கொடுத்தன!
சில உயிர் கொளுத்தின!
சில 'பொசுக்' என்றன!

இன்னும்,
'ஈரத்தில்' விழுந்த
சிலது மட்டும்
எரியவும் மாட்டாமல்
எதுவும் செய்யவுமியலாமல்
இருந்து தடுமாறின!

சில, 'ஏன் எரிகிறோம்...
எதற்கெரிகிறோம்....'
என்றே தெரியாமல்
எரிந்து தீர்ந்தன!!
இருக்கும் பெட்டியில்
அடுக்கடுக்காய்
இன்னும் இன்னும்
தீக்குச்சிகள்!!

'சாம்பலான பிறகு மட்டும்
சஞ்சலப்படவியலாது!'
ஏனெனில்,
எல்லோருக்குமே வாய்ப்பு
ஒரே முறைதான்!!

தீர்மானம் எடுக்கவல்ல
தீக்குச்சிகளே..,
என்ன செய்யப் போகிறீர்கள்?!

● நன்றி; ஞானம்.

# மருதாணியின்றி சிவந்த மண்ணும் உதிர்ந்து போன நட்சத்திரங்களும்

பெருநாளே, பௌர்ணமியே,
பத்து நட்சத்திரங்கள்
உதிர்ந்து போன
ஓர் இருட்டு வழியில்
என் கவிதை
உன்னை வந்தடைகிறது!

ஊரையே கவிழ்த்துவிட்ட
ஓர் உரத்த பொழுதில்
உன்னை வரவேற்க
நான் அழைக்கப்பட்டிருக்கிறேன்!

தியாகத்தில் விளைந்த திருநாளே
வியாபித்த வேதனையின்
விளிம்பில் நின்று வரவேற்கிறேன்
வா...!

உடம்பெல்லாம் தீப்பிடித்து
உயிர் உருகும் வேளையில்
கண்ணுக்கு மை போடும்
கட்டாயப் பொழுது இது!

தியாகத்தில் விளைந்த திருநாளே
நியாயத்தைச் சொல்ல
நீயாவது வா...!

மருதாணி போடாமலேயே
மண்ணெல்லாம் சிவந்த
மறக்காத பொழுதுதான்!

பெருநாளே, பேராவலே,
பெருமூச்சு நின்ற
பித்தப் பொழுதில்
முத்தே நீ
முகிழ்த்திருக்கிறாய்!

தியாகத்தில் விளைந்த திருநாளே
தியாகிகள்தாம் நாமும் –
நோன்பில் நிகழ்ந்த நோவுகளுக்கு
உன் கைகள் கொண்டேனும்
ஒத்தடம் கொடு!

பிள்ளை இழந்து பித்துப்பிடித்த
உம்மாமாருக்கெல்லாம்
பிரியமாய் வந்து பிரார்த்தனை செய்!

அல்லாஹ்வுக்குப் பிறகு
ஒரே நானாவையே ஒட்டியிருந்த
அரை டசன் தங்கச்சிகளுக்கும்
தலை தடவு!

திருமணம் முடிந்து
இரு மாதங் கழியுமுன்னர்
கனவெல்லாம் கலைந்து
கண்ணீரில் விழுந்த
வாலிப விதவைகளுக்கும்
வழி சொல்!

செய்வதறியாது
சோகம் வதைத்த
சொந்தங்களுக்கெல்லாம்
சுகம் கொடு!

உன்னை வரவேற்கும்
உற்சாகம் இழந்த
ஊரின் நிலைமையை
உணர்ந்து கொள்!

பெருநாளே...பேரின்பமே...
கழுகுகளையெல்லாம்
காலி செய்து விட்டு
புறாக்களோடு வந்து
புன்னகை செய்!

திருநாளே... தித்திப்பே...
கறுத்த மேகங்களின்
கட்டவிழ்த்து விட்டு
வரண்ட பூமிகளுக்கு
வாழ்த்துச் சொல்!

சிரிப்பே, சிந்தனையே,
சிக்கலையெல்லாம்
சீராக்கி
மக்களையெல்லாம்
மகிழச்செய்!

அணைப்பே...ஆதரவே...
விதியின் வெய்யில் கொதிப்பில்
விருட்சமாய் வந்து நிழல் தா!

பெருநாளே, பேரீச்சம் பழமே,
இந்த நாளுக்குரிய
இன்பத்தை
எந்த நாளும் பரிசளி!

பெருநாளே... பௌர்ணமியே
பத்து நட்சத்திரங்கள்
உதிர்ந்து போன
ஓர் இருட்டு வழியில்
என் கவிதை
உன்னை வந்தடைகிறது...

ஈத் முபாரக்!

◆❑◆

● நன்றி; ரூபவாஹினி

# ‘ஷொப்பிங்’

நிலவைப்
‘பேர்ஸா’ ய்
வைத்துக் கொள்ளணும்!
நட்சத்திரங்களைப் –
பணமாய்ச்
செலவு செய்யணும்!
தென்றலைத்
தோழியாய்க்
கூட்டிக் கொள்ளணும்!
சூரியனைக்
காவலுக்கு
நிற்கச் சொல்லணும்!
மேகத்தில் ஏறிப்
பயணம் போகணும்!
வானவில்லில்
ஒதுங்கி
இளைப்பாறணும்!

மின்னலைக் கிண்ணமாய்ச்
செய்து கேட்கணும்!
மழையைத்
தேனாய்
ஊற்றிப் பருகணும்!
செவ்வாயும் புதனும்
‘செல்யூட்’ அடிக்கணும்!
இரவும் பகலும் ஒதுங்கி நிற்கணும்!
வானத்தைக் கடந்தும்
நடந்து போகணும்!
வாழ்க்கையைக்
கடந்தும்
வாழ்ந்து பார்க்கணும்!!

◆□◆

● நன்றி; வாரமஞ்சரி.

## சாவு!

அப்பா செத்ததாக வந்த
கடைசித் தொலைபேசியில்
ஆடித்தான் போனான்,
சந்தோஷமாய்
அழைப்பை ஏற்கப் போன
சவப்பெட்டிக் கடைக்காரன்!

சூரியனுக்கும் முன்னே
விழித்து விடும் நான்...
சேவலுக்கும் முன்னால்
கொக்கரிக்கும் அவள்...
காகத்துக்கும் முன்பு
கரைந்து கொண்டிருக்கும் குழந்தை...

ஒவ்வொரு விடியலும்
பரபரப்பில் தான்
கண்விழிக்கும்

எல்லாமே
பார்த்துக் கொள்வது...
வேலைக்காரிதான்!
ஆனால்,

'டொய்லட்' செல்வதிலும்...
பல்துலக்குவதிலும்...
தேநீர் குடிப்பதிலும்...
உடுப்பு மாற்றுவதிலும்...
சாப்பிடுவதிலும்...
இத்யாதிகளில் –
முந்திக் கொள்ள
முண்டியடித்து
அவளும் நானும்
முகம் முறிந்து...
காலை வேளை போகும்
கசந்து...!!

போட்டது
போட்ட இடத்தில்...
வைத்தது
வைத்த இடத்தில்...
இதயம் மட்டும்
இருந்த இடத்திலும் இல்லாமல்...
'கொடுத்த' இடத்திலும்
இல்லாமல் -
வாழ்க்கை!!

நேரம் பார்த்தென்
காரியாலய 'பைல்' சிலவும்
காணாமல் போகும்!

'ச்சே... என்ன வாழ்க்கை...!?
பதட்டம்,
வாழ்க்கையை
அதட்டும்!
'தாமதமாகி விட்டதா...?'
நேரம் பார்க்கவும்
நேரம் இருக்காது!!

தாமதிக்கும்
ஒவ்வொரு நிமிடமும்
கத்தும் 'மெனேஜரின்'
கடுத்த முகம்
'என்லார்ஜா' கும்!

கிளிக்குஞ்சிடமும்
சொல்லாமல்
பாடசாலைக்கு அவள்
பறந்திருப்பாள்!!

குறைகாண முடியாதெனக்கு -
குழந்தை சுமக்கும் அவளிடையில்
குடும்பத்தின் மீதிப்பாரம்!

பழக்கவயப்பட்டவனாய் நான்
குழந்தை கன்னத்தில்
முகத்தைத் தேய்த்து
'டாட்டா' காட்டவும்
'டைம்' இல்லாமல்,
கொஞ்ச தூரம் போய்
திரும்பிப் பார்த்தால்..,

மூக்கை வடித்துக் கொண்டு
நம் பிள்ளை
கிணற்றடியில் விளையாடிக் -
கொண்டிருக்கும்!

சினிமாப் பாடலொன்றை
முணுமுணுத்தபடி
தன்முகத்துக்கு
'சோப்புப்' போட்டுக் கொண்டிருப்பாள்...
வேலைக்காரி!!

# அறிவைக் குழப்பும் அழகி!

சங்கம் வைத்து தழிழைச் சொன்னான்
சங்க காலத் தமிழன் – உன்
அங்கம் வைத்து அழகைச் சொன்னான்
அனைத்தும் படைத்த இறைவன்!
திங்கள் போன்று நீ சிரித்திட்டால்
இதயம் இழந்தா னிளைஞன்! – உன்
தங்கக் குரலால் நீ பேசிட்டால்
குருடன் கூடக் கலைஞன்!

நதியில் அசையும் படகைப் போல
நடக்கும் போது தெரியும் – நீ
இதயம் பறித்துப போகும் சேதி
போனவுடன் தான் புரியும்! – அட...
மேகத்துக்கும் விழிகள் இருந்தால்
மண்ணில் தானே திரியும்! – உன்
தேகங் கொண்ட அழகைக் கண்டால்
நிலவின் மனசும் எரியும்!

வீசும் காற்றும் விருப்பத்தோடு
உன்னை வந்து சேரும்! – நீ
பேசும் போதோ பேசுபவர்கள்
மனசும் நிலை தடு மாறும்!
நேஸம் கேட்க நெஞ்ச மெலோர்க்கும்
ஆசைக்காட்டி கூறும்! – உன்
தேசம் அடைய தகுதி யிலை என
திடீர் என அறிவோ சீறும்!

முனிவனும் உன்னைக் கண்டால் கடந்த
காலம் நினைத்து அழுவான்! - உன்
தனி யெழில் கண்டு நாத்திகன் தானும்
பள்ளி சென்று தொழுவான்!
கண்ணைப் படைக்க காரணம் உண்டு
சொன்னேன் உன்னைக் கண்டு! - நீ
என்னைச் சேர்ந்தால்...
இறைவனைக் கேட்பேன்
நூறில் வாழ்க்கை ரெண்டு!

◆❑◆

● நன்றி; வாரமஞ்சரி.

## இல்லாமை

குப்பி விளக்கில்
எண்ணெய் இல்லாமல்
ஒவ்வொரு இரவும்
அப்படியே கிடக்கிறது...
வாசிகசாலையிலிருந்து
வாங்கி வந்த புத்தகம் –
' எடிசனின் வரலாறு!'

# உடனடித் தேவை!

பெய்கிறது மழை -
கொறித்துச் சாப்பிடக்
கொஞ்சம் கடலை...
மென்று தின்னக்
கொஞ்சம் முறுக்கு...
குளிர்காய, ஓர்
அடுப்பு....
சூடேற்ற ஒரு
சிகரட்...
காதலிக்கு ஒரு
கடிதம்...
'மூட்' இருந்தால்
சில கவிதை...
குறைந்தது -
சூடாய் ஒரு
'ப்ளேண்டீ....'
மழை -
பெய்து கொண்டுதானிருக்கிறது -
வீடு என்றால்,
ஒரு கட்டில்...
கட்டில் என்றால்,
ஒரு போர்வை...
தலைக்கும் தழுவலுக்கும்
சில
தலையணை...
மனம் மிதக்கும் சில
நினைவுகள்...
சில கனவுகள்!

மழையில் இப்படி -
மனசுக்குத் தேவைப்படும்
சில
சின்னச் சின்ன மயக்கங்கள்..!
மெய்...
இருந்தாலும் கூட -
இந்தப் பேய் மழையில் நனைந்தால்
நோய் கொள்ளும் எனது
உடனடித் தேவையோ...
இப்போதே வீடுபோய்ச்சேர
ஒரே ஒரு குடை மட்டும் தான்!
ஒரு குடை கிடைக்குமா?!

● நன்றி; தினகரன் வாரமஞ்சரி.

## வாழ்க்கை

வாழ்க்கை என்பது ஓர்
எரியும் மெழுகுவர்த்தி:
அது....
சாவை நோக்கியே
உருகிக் கொண்டிருக்கிறது!

வாழ்க்கை என்பது...
ஒரு கதை :
சிறு கதையோ தொடர்கதையோ...
முடிவை நோக்கியே
நகர்கிறது...!

வாழ்க்கை என்பது...
ஒரு பெரிய பொய் :
பொய் நிலைத்ததாக
சரித்திரமுண்டோ!

வாழ்க்கை என்பது,
ஒரு கனவு :
மரணித்த பின்னரே
தெரியும்!
ஏனெனில்,
மரணம் என்பது தான்
விழிப்பு!!

மூச்சை
நாம் விட்டால்...
வாழ்க்கை!
மூச்சு
நம்மை விட்டால்...
மரணம்!!


ஒவ்வொரு விநாடியும்
சுண்டிவிடப்பட்ட
நாணயமாய் நாம் :
பூவும் விழலாம்!
'தலை' யும் விழலாம்!!

வாழ்வும் சாவும்
விளையாடும் இந்த மைதானத்தில்
வெறுமனே நாம் ஒரு
பந்து தான்!

இது,
எந்தச் சுற்று
இறுதிச் சுற்றென்று
புரியாத ஒரு
புதிராட்டம்!
ஆனால்,
சாவே
'செம்பியன்' என்று
தீர்மானிக்கப்பட்ட ஒரு
திகைப்பாட்டம்!

# 'நான் எனும் நீ!'

தலைவா!
உங்களைக் கொன்றது
நாங்கள் தான்!




உங்கள் சிரமம் கோர்த்து
செய்து தந்த
கொள்கைப் பூமாலைகளைக்
கொறித்துக் கொறித்துப்
பிய்த்தெறிந்தவர்கள்
நாங்கள் தான்!

உங்கள் இரத்தம் சிந்தி
வளர்த் தெடுத்த
மரங்களடர்ந்த இந்த
மணக்கும் தோப்பை,
ஆளாளுக்காய் துண்டாடிக்கொண்ட
அத்தனைப் பாவிகளும்
நாங்கள் தான்!

துவக்குகளின்றியும்
வெடிகுண்டுகளின்றியும்
வேறெவ்வித ஆயுதங்களின்றியும்
உங்களை – ஆகாயத்திலல்ல – மண்ணிலேயே
நார் நாராய் ஆக்கியதும்
நாங்கள் தான்!

நீங்கள் என்பது,
வெறுமனே
உங்கள் உடல் மட்டுமல்ல –
அது,
எதிரிகளுக்கு!


நீங்கள் என்பது,
உங்கள் கோட்பாடுதான்..!
கொள்கை தான்..!
இலட்சியம் தான்..!
எனவே,
உங்களை
உண்மையாய்க் கொன்று –
கொண்டிருப்பது..,
தலைவா!
வேறெவருமின்றி
நாங்கள் தான்...
நாங்களே தான்!



யாருக்காக
நீங்கள்
மரம் நட்டீர்களோ!
அந்த நாங்கள்,
வெய்யிலில் கிடந்து
வெந்து சாகிறோம்!
உங்கள்
பெயரைச் சொல்லிச் சொல்லியே...
ஒவ்வொரு கிளைகளாய்...
உடைத்து முறித்து
உங்கள் வாரிசுகளாய்த்
தம்மைத் தாமே
உருவகித்துக் கொண்டவர்கள்,
எடுத்துச் சென்றுவிட்டார்கள்!

யாருக்காக நீங்கள்
போராட
நினைத்தீர்களோ,
அந்த எங்களை
உங்கள் சீடர்கள்
'புட் போலா' க நினைத்து
போட்டு
உதைக்கிறார்கள்!

தலைவா!
எந்த மந்திரத்தை நீங்கள்
ஜபித்துக் கொண்டிருந்தீர்களோ,
அதைப் போலவே
உங்கள்
சீடர்கள் சிலரும்
வாயசைத்துக் கொண்டிருக்கிறார்கள்!



நீங்கள்
வரைந்த
இலக்கை அடையும்
வழி சொல்லாமல்,
'ஓட்டுநர்' சீட்டுக்காய்
இவர்கள் ஓட்டு மொத்தமாய்
அடித்துக் கொள்கிறார்கள்!

எங்கள் சிங்கமே,
நீங்கள் 'விட்டுப்போன' பிற்பாடு,
மரங்களடர்ந்த இந்தக் காட்டில்
சில நரிகளும்
ராஜாக்களாகி விட்டன!


சில எலிகளும்
மீசைகளை ஒட்டி
பூனைகளைப் போலப்
போக்குக் காட்டுகின்றன!

தலைவா!
உங்கள்
கொள்கைகளின்
கைகளையும் , கால்களையும்
பதவிச் சங்கிலிகளால்
போட்டுக் கட்டிக்கொண்டு
நாலா பக்கமிருந்தும்
இயன்றமட்டும்
இழுத்துப் பிய்க்கிறார்கள்
கழன்று சிதறும் வரை!

எங்களைக் கூறுபோடுவதில்
இவர்களிடம்
எதிரிகள் கூட
தோற்றுப் போய்விட்டார்கள்!
இப்படியிருக்க...

தலைவா!
உன்னைக் கொல்வது
வேறு யார்...
நாங்கள் தான்

◆❑◆



யார் முன்வருவீர்...
சில்லறைக் காசுகளாய்
சிதறிக் கிடக்கும் எம்மை,
ஒரே தாளாய் மாற்றி
உயர்ந்த இடத்தில் வைக்க?

யார் முன்வருவீர்...
நடுத்தெருவில்
நாதியற்றுக் கிடக்கும்
நமது தேரை
ஒரே திசையில் இழுக்க?


யார் முன்வருவீர்...
சூரியன் இல்லாத
ராத்திரியில்
ஒரே நிலவை எரிக்க?

யார் முன்வருவீர்...
தனித் தனித் துரும்பாய்
பிரிந்து நில்லாமல்,
ஒற்றுமைக் கயிறாகி
எம்மை ஒன்று படுத்த?

யார் முன் வருவீர்...
பழசை எல்லாம் மறந்து
தலைவர் கனவை
உயிர்ப்பிக்க?

யார் முன்வருவீர்...
தலைவரின் 'வஸிய' த்தை
தலை மேல் சுமக்க?

யார் முன் வருவீர்..,
'நான் எனும்
நீங்கள்'
என்றல்ல: தலைவர்,
'நான் எனும்
நீ' என்று
ஒருமையில்
சொன்னதை
உள்வாங்கிக் கொள்ள?



# நாளையல்ல – இன்று!

நாளை என்பது பொய்யடா!
இன்றே செய்வதைச் செய்யடா!
காலம் காலை வாரும் முன்னர்
உள்ளதைக் கொண்டு உய்யடா!

கையில் இருக்கும் இந்தப்பகலை
காண மறுப்பது ஏனடா!
'ஐயோ... நாளை நாளை' என்பது
எங்கோ தெரியும் வானடா!

நாளை என்பது உறுதி இழந்த
கோழை மனிதரின் வாக்கடா!
தோளில் வீரம் திரண்ட தோழா
துணிந்து நீ இதை நீக்கடா!

எங்கோ இருக்கும் 'நாளை'க்காக
எப்படி நீயும் ஏங்குவாய்?
இங்கே 'இன்று' விதைக்க மறுத்தால்
எங்ஙனம் விளைச்சலை வாங்குவாய்?

வாலை ஆட்டும் கனவினில் நாளும்
வாழ்வைக் கழிப்பது மடத்தனம்!
ஏழைத் தோழா எழுந்திரு இன்னும்
ரொம்பத் தூரம் நடக்கணும்!

# காதல் குரூரம்

வாலிபத்தைக் கீறும்
உன்
வசீகரக் கத்தி
சொட்டுச் சொட்டாய்
ஒழுகி
இரவுகளைக் கறைப்படுத்தும்
உன் கனவு ரத்தம்!

ஒத்தடம் கொடுக்க
வழியில்லாமல் –
மனசு பூராவும்
உன்
ஞாபகத்தின் எரிவுகள்!

எத்தனைமுறை
வாசித்து முடித்தாலும்
மீண்டும் என்னைத்
தீண்டும்..,
உன்
நேற்றைய கடிதவரிகளின்
நீண்ட நகங்கள்!

மனசை
மயிலிறகு போல்,
மெல்ல மெல்ல வருடிக் கொடுக்காமல்,
ஏக்க ஊசிகளை
ஏற்றி வதைக்கும்
உன் போற்றத்தகும்
புகைப்படங்கள்!

அத்தனை அலுவல்களையும்
ஆக்கிரமித்து
அடிக்கடி தன்
சர்வாதிகாரத்தின் ஆட்சியை
பலப்படுத்தும்
உன்
வராத கடிதத்தின்
வலிமை!

உனைக்கண்ட போது
சிலிர்ப்பையும்,
காணாதபோது
ஏக்கத்தையும்...
தன்னிரு பக்கங்களாய்
மாற்றி மாற்றி விழுத்தும்
இந்தக் காதல் நாணயம்!

காதலின் விளைவு
ஒன்றுதான்:
தோற்றாலும் வேதனை!
வென்றாலும் வேதனை!!

◆ ❑ ◆

● நன்றி; தினகரன்.

# நிஜமும் கனவும்!

தம்பீ,
கடைசி வரை இன்னும்
கண்டுபிடிக்கவே முடியவில்லை -
உன்னைக் கொன்றவர்
யார் யாரென்று...!
ஆனால்,
உன்னை நினைத்துக்கொண்டு
உறங்கப் போகும்
ஒவ்வொரு முறையும்,
கால் இல்லாத ஒன்றுதான்
நம்
கனவில் வருகிறது!

# நீங்களும் நானும்!

ஒரு கவிதைப் புத்தகம் போல
நான்
காத்துவருகிறேன்.
பழைய 'பேப்பர்' த்துண்டாய்
நீங்கள் என்னை
அடுப்பில் எறிகிறீர்கள்!

தேக்கு மரத் தோப்பாய் நான்
போற்ற நினைக்கிறேன்
கழிந்து செல்லும்
மரத்தூளாய் – நீங்கள்
காட்டி நிற்கிறீர்கள்!

ஒரு வரவாய்
உங்களை நான்
சொல்லிக் கொண்டிருக்கிறேன்!
வீண் செலவாய் நீங்கள் என்னை
வியாக்கியானம் செய்து
கொண்டிருக்கிறீர்கள்!

உங்கள்
கனவுகளுக்காகவே நான்
கண்ணுறங்குகிறேன்!
ஆனால்,
மரணித்துவிட்டதாக நீங்கள்
மாற்றுக்கதை
புனைகிறீர்கள்!

உங்கள் விமானத்துக்கு
சிறகாய் இருக்கவும்
சம்மதிக்கிறேன்.
ஆனால் என்
ஓட்டை வண்டியின்
அச்சாணிகளையும்
அகற்றி விடுகிறீர்கள்!

உங்கள் குறட்டைகளையும்
நான்
சங்கீதம் என்கிறேன்.
என் சிரிப்பைக் கூட
நீங்கள்
'ஒப்பாரி' என்கிறீர்கள்!

உங்கள்
காற் செருப்புகளைக் கூட
அரியாசனத்தில்
அமர்த்துகிறேன்!
நீங்களோ,
காற்செருப்புகளாக என்னை
வாசலிலேயே
கழற்றி வைக்கிறீர்கள்!

பரதன் போல்
பரம பாசத்துடன் உங்களை
இராமனின் ஸ்தானத்தில்
இருத்துகிறேன்.
நீங்களோ,
'கும்பகர்ணன்' என்றுதான்
இன்னும் என்னைக் -
கூப்பிடுகிறீர்கள்!

◆❑◆

## விழிப்பு!

விழித்திருப்பவை -
நிலவு...
நட்சத்திரங்கள்...
ஊளையிடும் நாய்...
மணியடிக்கும் சுவர்க்கடிகாரம்...
பற்ற வைத்த நுளம்புச் சுருள்...
மேலும் -
மெலிதாய்...
இரசிக்கப் போட்ட ' ரேடியோ...'
அறையில் எரியும்
விளக்கு...
பருவக் கனவுகள்...
தாள் இமை திறந்தபடி
படிக்க எடுத்த கொப்பி...
இத்தியாதிகள்..!

இதுவே தொடர்ந்தால் -
பரீட்சையின் பெறுபேறு
பேசும் நாளை...,
தூங்கிக்கிடந்தது -
'நானும் எனது இலட்சியங்களும்' என்று!!

## மாறிவரும் நான்!

என் வாசல் வந்து
தட்டுகிறது...
முதுமை!

வாலிபத்தின்
கொல்லைப்புறத்தில்
நான்!

ஒரு விஷம் போல் முதுமை,
மெல்ல மெல்ல ஏறுகிறது...
எனக்குள்!

எனது வாலிபம்
ஒரு குதிரை :
அதில்,
ஏறிக் குதித்து
எகிறிக் களித்து
பயணித்தவன் நான்!
இப்போது –
நானொரு கழுதை :
வாழ்க்கை,
என்மேல் தன் சுமைகளை
ஏற்றத் தொடங்குகிறது!!

ஒரு மெல்லிய கொடி போல்
மெல்லப் படர்ந்து,
எனைப் பற்றி வளரும்
இந்த முதுமை,
மலைப்பாம்பாய் மாறி,
என் தசை முறுக்கி,
எனைக்
கொஞ்சம் கொஞ்சமாய்
விழுங்கும்!

என்னதான் முயன்றாலும்
பிடித்துக் கொள்ளும்
இந்த முதுமையிலிருந்து...
யாரால் தப்பிக்க முடியும்?!

வாலிபம்,
வசந்தத்தை அறிமுகப்படுத்தியது போய்,
முதுமை,
இலையுதிர் காலத்தோடு
வந்து சேர்கிறது!!

13 – இலிருந்து
வாலிபம் தொடங்குகிறது.
31 – இலிருந்து
முதுமை தொடங்குகிறது!

முதலாவதின் மறுபக்கமாய்
இரண்டாவது!!

ஒவ்வொன்றாய்த் திறந்து கொண்ட
வாழ்க்கையின்
அத்தனை கதவுகளும்,
ஒவ்வொன்றாய் மூடிக்கொள்ளும் சத்தம்
தூரத்தில் கேட்கிறது..!

எனக்குள் நிகழ்ந்த கூர்ப்பு,
எதற்கென்ற அர்த்தம்
இப்போது புரிகிறது!

தாண்டி வந்ததாய்
அப்போது மார்தட்டிய
அத்தனை சுவர்களும்...
திரும்பிப்பார்க்கையில் இப்போது
தரைமட்டமாய்த்
தெரிகிறது..!

புதிய பாலைவனத்தின்
தண்ணீர்ப்பைகளாக
சில
பழைய நினைவுகள் மட்டும்
மகிழ்விக்கின்றன!

போதும் இனி –
தனக்காகவே வாழ்ந்தது
இதுவரை...!
இனியேனும் வாழவேண்டும்...
யார் யாருக்காகவாவது!

◆❑◆

● நன்றி; ஞானம்

# நீ தான் யாரடீ...!

விஷத்தை மட்டுமே
நீட்டத் தெரிந்தவள் நீ :
இருந்தாலும்..,
என் தாகங்கள் ஏன்...
உன்னிடத்திலேயே
கையேந்துகின்றன!

அட்டைகளுக்கே
அரசி நீ :
தெரிந்தும் கூட –
என் காயங்கள் ஏன்...
இரத்த தானத்துக்காய்
உன்னிடத்தில் மட்டுமே
மறுபடி மறுபடி
மண்டியிடுகின்றன!

ஒவ்வொரு முறையும் நீ
நெருப்பைத் தானே
மூட்டுகிறாய் –
இருந்தும்...இந்தப்
பஞ்சுக்குப் புகலிடம் தரச்சொல்லி
கெஞ்சிக் கொண்டிருக்கிறதே
நெஞ்சம்?

சொல் –
உனைப் பொறுத்தவரை,
காதல் என்பது என்ன...
முட்கள் மட்டுமே வளரும்
நந்தவனமா?!
பேய்கள் ஒன்றே வசிக்கும்
அந்தப் புரமா?!

# முரண்!

பாதி தெரியும்
உன் மார்பை...
வாலிப்பான உன் கால்களை...
'லோ ஹிப் ஜீன்ஸி'ல் திரியும்
உன் தொப்பூளை..,
குடை கொண்டு,
கூந்தல் கொண்டு,
புத்தகங்கள் வைத்து,
கைப்பை சாய்த்து
மறைத்துக் கொள்கிறாய் –
ஆண்கள் பார்க்கையில்!

பிறகேன்
கேட்டுத் தொலைக்கிறாய் இப்படி
'உங்கள் பெண்கள் ஏன்...
மூடி மறைத்து
முக்காடுடன் அலைகிறார்கள்!'

# நான் உனது தெய்வமல்ல!

நான் உனது
தெய்வமல்ல -

ஐந்து ரூபாய்
பிச்சை போட்டதற்காய்
அப்படி அழைத்தாய்!

என்னிடம் நீட்ட
உனக்குக் கையும்...
எனைப் பார்க்க
உனக்குக் கண்ணும்...
என்னிடம் கேட்க
உனக்குக் குரலும்...
கிடைத்த காசை எண்ணிப்பார்க்க
விரல்களும்...
அலைந்து திரிகிறாயே
அந்தக் கால்களும்...
என்னால் தர
இயன்றவையா?!
எதற்குத் தான்
என்னைப் பார்த்து
'தெய்வம்' என்றாயோ...!!!

பாவி...
பார்க்கத் தெரியாதா
உனக்கு,
உண்மைத் தெய்வத்தை?!

நீட்டிய உன் கரங்களுக்கு
போடச் சொல்லியும்...
காய்ந்த உன் கண்களைக்
கவனிக்க வைத்தும்...
குறுகிய உன் குரலை
என் செவிக்குள்
ஏறச் செய்தும்...
உனக்காய் இரங்கப்பண்ணியும்
வைத்ததே
உள்ளிருந்து
ஒரு தெய்வம்...

ஐயோ...
அதை நீ
எப்போதுதான் காணுவாயோ...
அதனிடம் எப்போதுதான்
கை நீட்டுவாயோ...
அதை எப்போது தான்
'தெய்வமே' என்று
அழைப்பாயோ..!!

சத்தியமாய்ச் சொல்கிறேன் –
நானோ அல்லது
நாங்களோ...
உனது
தெய்வமல்ல!!
அந்தப்பெயரை
எமக்குச்
சூட்டி விடாதே!

◆❑◆

# அன்புள்ள தம்பிக்கு.....

தம்பி...,
உனக்கொரு கடிதம் வரைய
உள்ளுக்குள் ஓர் ஆசை –
எப்படி நீ
இருக்கிறாய்....?
கேள்விக் கணக்கெல்லாம்
கேட்கப்பட்டாச்சா....
நீதி உன் மீது
செலுத்தப்பட்டாச்சா....
சுவர்க்கம் நரகத்தின்
சுகந்தம் வருகிறதா....!
'கப்று' உன்னோடு
காதல் கொள்கிறதா....!

தம்பி...,
வெகுநாளாய் உனக்கொரு
கடிதம்வரைய
எனக்குள்ளே ஓர் ஆசை!

மரணத்தில் கால் தடுக்கி
மண்ணுக்குள் நீ விழுமுன்
என்ன நேர்ந்ததென்று
எமக்குத் தெரியாது!
மரணம் சம்பவித்து
மண்ணில் நீ வீழ்ந்த பின்னர்
இங்கே நிகழ்ந்தவொன்றும்
உனக்குத் தெரியாது!!
எனவேதான் தம்பி,
உனக்கொரு கடிதம் வரைய
உள்ளத்தில் ஓர்ஆசை
நடப்பதெல்லாம்
அறிந்திடுதல்
நல்லதடா நீயும்!!

அன்று,
ஊரே அல்லோல
கல்லோலப் பட்டதுடா – !
எத்தனை
பேரோ...யாரோ...
பித்துப் பிடித்ததடா?
நேரில் போய்ப் பார்க்க
நிலைமை இல்லையடா...
தம்பி,
யாரோ சொன்னார்கள்
நீயும் இருந்தாயாம்!

மூன்று பேர்சரியாம்...
முதலில் சொன்னார்கள்!
நான்கு பேரென்று
பின்னர் சொன்னார்கள்!
ஐந்து ஆறாகி
ஏழு எட்டாகி
ஒன்ப தென்றார்கள் –
ஐயோ... பனிரெண்டாம்!

பத்துப் பேர் நம் ஊரா...!
சுட்டுப் போட்டனரா..!!
வித்தலில் 'வேன்' மோதி
வீழ்ந்து கிடக்கிறதா?!
கத்தக் குரல் கம்மி
கலக்கப் பேய்பிடித்து
இரத்தக் கொதிப்பேறி
ஊரே வீழ்ந்ததடா!

'தம்பி' என்றுன்னை
அழைக்கக் கூடாதாம்..!
'மையித்' என்றார்கள்...
மனசு தாங்கவில்லை!!
ஐயோ... இது என்ன
ஆகிப் போச்சுதிங்கே...!

மெய்யில் ஒரு சொட்டு
உசுரும் போனதெங்கே...?

தேர்தல் வந்தெமக்கு
ஆறுதல் கூறுமென்று
யாரோ சொன்னதனால்
ஊரில் நாமிருந்தோம்!
பருந்தாய் அது வந்து
பறவைகளைத் தின்றதடா!
இருந்த ஆறுதலும்
அறுந்தே போனதடா!

தம்பி, உனக்கு
வெகுநாளாய் ஒரு கடிதம்
வரையத்தான் ஆசை
ஏனெனில் உனது
மரணத்தின் முன் செய்தி
நமக்குத் தெரியாது.
அதனின் பின் செய்தி
உனக்குத் தெரியாது!

வழக்குக்குப் போனோம்
வாதாடிப் பார்த்தோம்...
கிழக்கில் சூரியனும்
உதிக்கக் கண்டதற்கு
சாட்சிகள் வேண்டுமென்றார்
சரியெனக் கொடுத்தாலும்
'காட்சிகள்' மாறும் வரை
கண் கட்டு நடக்கிறது!
உன்னைக் கொன்றவரை
உயிர்த்து நீ வந்து
கண் முன் வைத்தாலும் –

தம்பி..,
'காலம்' இவர்க்குண்டு!
மீண்டும் நீ இங்கு
மாண்டு போகும் வரை
நீண்டு கொண்டிருக்கும்
நாம் தொடுத்த வழக்கெல்லாம்!

நுளம்புச் சுருள் இரவில்
எரித்து வைத்தது போல்...
வழக்குகள் எரிகின்றன்
தூக்கம் நமக்கெல்லாம்
கண்ணில் சொருகிவிடும் -
பின்னர் பார்ப்பதற்கு
என்ன இருக்கிறது...
விடிந்தால் மறந்துவிடும்!!

எனவேதான் தம்பி,
உனக்கொரு கடிதம் வரைய
எனக்கோர் ஆசை -
உனது....
மரணத்தின் முன் செய்தி
நமக்குத் தெரியாது!
அதனின் பின் செய்தி
உனக்கும் தெரியாது!!

கொள்கை பிழைத்திங்கு
கொலைகள் செய்தவரை
கொல்லும் சட்டத்தைக்
கொண்டு வரவேண்டும்!
கிள்ளி எறிந்து விட
கீரைக் கட்டுகளா....?!
பிள்ளைச் செல்வங்கள்
பேணும் நிலை வேண்டும்!!


காலம் மாறிடணும்!
காயம் ஆறிடணும்!!
வாழும் போதினிலே
வழக்கும் தீர்ந்திடணும்!
'காட்சி' மாறும் முன்னர்
'சாட்சி' வென்றிடணும்
'சீச்சி...' போச்சு இனி...
'மீட்சி' என்றிடணும்!

இன்னொரு தேர்தலுக்கு
உத்தர வாதமெங்கள்
மண்ணிலே தோன்றும் வரை
எம்மிடம் எதுவுமில்லை!
தம்பி.....
சொன்னாலும் நம்பமாட்டாய்...
இன்னொரு தேர்தலுக்கு
எம்மிடம் எதுவுமே இல்லை...
உள்ளத்தில் பயத்தைத் தவிர!!

செவியிலே கேட்குதேதோ..
வெடிச்சத்தம் தம்பி நில்லு!
வெளியிலே பார்த்து நானும்
விரைவிலே வந்துசேர்வேன் –
எழுதிட இன்னும் உண்டு –
எத்தனை சொல்ல வேண்டும்!..
பொழுதுதிது பொருத்த மில்லை...
பிறகிதைத் தொடருகின்றேன்!

◆❑◆

● 2002 தேசிய மீலாத் விழாவன்று உடத்தலவின்னையில் பாடப்பட்டது.



கடலே!
தூர இருந்தே
இரசித்து விட்டு போகிறேன்

.........................................

உன் புன்னகைகளை
எப்படி நம்புவது?!

# வீட்டுக்காரிக்கு!

நூலைத்தான்
வைத்திருக்கிறேன் –
ஊஞ்சல் கட்டச் சொல்லி
உளறுகிறாய்!

சிலந்தி வலைதான்
செய்திருக்கிறேன் –
சிங்கம் பிடிக்கச் சொல்லிச்
சிணுங்குகிறாய்!

முற்றுகையிட்டுள்ள
இருளைப் பார்...
முறியடிக்கச் சொல்லி இந்த
மின்மினியிடம் ஏனடீ...
முறையிடுகிறாய்?!
செருப்பிருக்கிறதுதான்...
அதற்காக,
நெருப்பின் மீதுமா
நடக்கச் சொல்லுவாய்?!

பக்கத்து வீட்டுக் காரியின்
பூப்பற்றியே
புலம்பிக் கொண்டிருக்காதே
தட்டை போகாமல்
உன் கூந்தல் காக்கும் என்
கரிசனை பற்றியும்
கொஞ்சம்
கருத்தில் கொள்!

உன் ஆசைகளையெல்லாம்
அர்த்தப்படுத்த,
எனக்கும் ஆசைதான்
இருந்தாலும் -
ஒன்றை நீ
உணர்ந்துகொள்ள வேண்டும் -
முன்பு போலல்ல -
இப்போதெல்லாம்
இதுதான் வாழ்க்கை -

‘கடற்கரையில்
ஓடவும் வேண்டும்
கைவிளக்கு
அணையவும் கூடாது!’

◆❑◆

● நன்றி; செந்தூரம்.

## நன்றிக்குரியவர்கள்!

திருவாளர்கள் :

கவிஞர் A.R.A. ஹஸீர்
M.I.M.நிஸ்பான் (சனா) மகன்
S.A.பவ்சான்
S.A.ஷப்ராஸ்
M.M.M.ஹபீல்
M.I.M.ரிஸ்வான்
M.A.M.அர்ஷாட்
M.H.M.ரிஷாட்
M.S.M.ஷரப்
A.M.ஜயூப்கான்
J.M.சித்தீக்
M.M.ஷிப்லி நானா
ரவ்சான் தம்பி
M.S.ஹிஷாம் மருமகன்
M.S.M.ரிஸ்வான் நானா (ஷாஸன்ஸ்)
பீர்முகம்மது (சகோதரர்)
ராமன் ஐயா
இஸ்மாயில்
மாமா ,மாமி
ஷப்ராஸ்
லாஹிர்
ரியாஸ் ஷப்ராஸ்
அனஸ் (மகன்)
சுது
ஹஸீம்
ரிகாஸ்
ஸமீக்
ஷிஹான்
அரூஸ்
அஸாருதீன்

பந்துல (ஷாஸன்ஸ்)
டில்ஷான் (ஷாஸன்ஸ்)
துஷாந்த (ஷாஸன்ஸ்)
உக்குவளை அக்ரம்

<u>செல்விகள் :</u>

M.M.F.ரிப்கா
M.I.M.ரிபா
அமுதா (ஷாஸன்ஸ்)
ருஷ்தா கலீல்
பர்ஸானா கியாஸ்
ஸ்ரீ தேவி (ஷாஸன்ஸ்)
மற்றும் பஸ்ரினா ஹிஷாம், ருக்ஷானா மர்சூக் இவர்களுடன் குடும்பத்தவர், விடுபட்டவர்கள் அனைவரும்.

# காலத்தை வெல்லும் கவிமலர்



மருதாணி இல்லாமல் கை சிவக்குமா? கொடைச்சிறப்பால் கை சிவக்கும். மருதாணி இடாமல் மங்கையின் முகம் சிவக்குமா? நாணத்தால் நங்கையின் முகம் சிவக்கும். சாயங்காலப் பொழுதை வானம் அபிநயம் பிடிக்கும்பாது, வான்முகம் சிவக்கும். மருதாணியின்றி மண் சிவக்குமா...?

சிவந்தது...எங்கே? எப்போது?

இவ்விரு வினாக்களுக்கும் இலங்கை அரசியல் அரங்கில் விடை, சோகம் தழுவி-விழியோரக் கரையில் கண்ணீர் நழுவி சொட்டுகிறது; சொட்டிக் கொண்டேயிருக்கிறது, இப்போதும்...!

இந்தக் 'கண்ணீர் கதை'யை காலவெள்ளம் அள்ளிச் சென்றிடாமல், ஆவணப்படுத்தும் ஆசையில், ஹஜ் பெருநாள் (2002ல்) விஷேட தொலைக்காட்சி கவியரங்கில் (ஒலி -ஒளி) வான் அலைகளில் வார்த்தையாடி, இப்போது வண்ணத்தமிழ் வார்த்தைகளின் நூற்சிறையில் ஆயுட்கால கைதியாக்கியிருக்கிறது, ஒரு மலர்.

அது...மருதாணியின்றி சிவந்த "அந்த" மடவளை மண்ணில் மலர்ந்த ஒரு கவிமலர்.

இக்கவிமலர், மரபு தோண்டியும்-தாண்டியும், ஹைகூவை அண்டியும் கவி படைக்கும். மலர்ந்த மடவளை மண்ணில் மணம் தூவி, அதன் குணம் பரப்பி மகிமை கொள்ளும்.

காலத்தை வென்று புவி மேட்டில் கவிமணம் கமழப்போகும் அந்தக் கவிமலர் வேறு யாருமல்ல...

மடவளை அன்சார் எம். ஷியாம்தான்

"காதிபுல் ஹக்" எஸ்.ஐ.நாகூர் கனி.

24/15, பேரா வீதி,
கொழும்பு 12.
21.06.2005.

Designed & Printed by : Shasons - Madawala. 081-5740024